**5. MAHALIR THITTAM**

## 5.25 சென்னை மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மாற்றம் – சென்னை மாநகராட்சி ஆணையர் நியமனம்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி1) துறை

அரசாணை (நிலை) எண்.136 நாள் : 6.8.2007

படிக்க :

1. சென்னை மாநகராட்சி ஆணையரின் நே.முக.எண்.J/C/(Edn.) P.C.No.KLU/MT/ 2007, நாள் 9.5.2007
2. ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் தலைமையில், 18.7.2007 அன்று நடைபெற்ற கூட்ட நடிவடிக்கைக் குறிப்பு
3. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் நே.மு.க.எண். 940/அ1/07, நாள் 26.7.07

**ஆணை**

சென்னை மாநகராட்சி ஆணையர், அனைத்து மாவட்டங்களிலும் திட்ட அலுவலர்(மகளிர் திட்டம்) மாவட்ட ஆட்சியரகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த அமைப்பு ஊரகப் பகுதிகளில் வெற்றிகரமாக அமைந்தாலும், நகர்ப்புறங்களில் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டிருப்பதே சிறந்ததாகும் என்றும், மாநகராட்சியின் கீழ் பலதரப்பட்ட களப்பணியாளர்கள் இருப்பதால், மகளிர் சுய உதவிக்குழுக்களை வங்கிகளுடன் இணைப்பது எளிதாக இருக்கும் என்றும், அறிவொளி இயக்கம், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டம், முத்துலெட்சுமி ரெட்டித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் திருமண உதவித் திட்டம், SJSRY திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதில் சென்னை மாநகராட்சி சிறந்த அனுபவம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்து சென்னை மாநகராட்சி ஆணையரை சென்னை மாவட்ட மகளிர் திட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இப்பொருள் குறித்து 18.7.2007 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் அவர்களால் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் ஆகியோருடன் விவாதிக்கப்பட்டது. சென்னை மாவட்டத்தில் 15,585 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் 54 அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மகளிர் திட்டத்தில் இணைந்து செயல்பட்டுவருகின்றன. மகளிர் திட்டத்தில் மாவட்ட அளவிற்கு கீழ் அலுவலர்கள் இல்லாததால் வலுவான அலுவலக அமைப்பின்றி தன்னார்வ தொண்டு நிறுவனங்களையே முழுமையாக சார்ந்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது வட்டார அளவிலான அலுவலர்களை மகளிர் திட்ட பணிகளில் ஈடுபடுத்தி கண்காணிப்பு பணிகளை வலுப்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. அதேபோல் சென்னை மாவட்ட திட்ட செயலாக்க அலகிலும் கண்காணிப்பு பணிகளை களப்பணியாளர்களைக் கொண்டு மேம்படுத்துவது அவசியமாகும். சென்னை மாநகராட்சியில் SJSRY திட்டத்தை செயல்படுத்த மண்டல அளவில் சமூக நலப்பணியாளர்கள் உள்ளனர். ஆகவே, சென்னை மாநகராட்சியால் மண்டல அளவில் கூடுதல் பணியாளர்களை ஈடுபடுத்தி மகளிர் திட்ட பணிகளை சென்னை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்த இயலும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

3. அதனடிப்படையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், சென்னை மாநகராட்சி ஆணையரை சென்னை மாவட்ட மகளிர் திட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமிக்குமாறு வேண்டி செயற்குறிப்பு ஒன்றினை அனுப்பியுள்ளார். அதில், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர், சென்னை மாவட்ட மகளிர் திட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவராக, 16.01.2006 முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும் சென்னை மாநகராட்சி SJSRY திட்டத்தை செயல்படுத்தி, அதன் கீழ் மகளிர் சுயஉதவிக்குழுக்களை உருவாக்கி உதவிகளை வழங்கி வருகிறது என்றும், மாநகராட்சியில் மண்டல அளவில் அதிக அலுவலர்கள் பணிபுரிவதால் மகளிர் திட்ட பணிகளை செம்மையாக கண்காணிக்க ஏதுவாக இருக்கும் என்றும், எனவே, SJSRY மற்றும் மகளிர் திட்டத்தை நல்ல ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தவும், சென்னை மாவட்ட மகளிர் திட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக மாநகராட்சி ஆணையரை நியமனம் செய்ய கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலும் சென்னை மாநகராட்சி களப்பணியாளர்களை மகளிர் திட்ட பணிகளை கண்காணிக்க பயன்படுத்தலாம் எனவும் பயிற்சி மற்றும் தொண்டு நிறுவனங்களின் பட்டியல்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம்

மகளிர் திட்ட அலுவலகத்திலேயே தொடரலாம் எனவும், இக்கருத்துருவை நடைமுறைப்படுத்த தேவையான செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரும், சென்னை மாநகராட்சி ஆணையரும் கலந்தாலோசித்து முடிவு எடுக்க அதிகாரம் வழங்குமாறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்த பின்னர், சென்னை மாவட்ட மகளிர் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக சென்னை மாநகராட்சி ஆணையரை பின்னர், சென்னை மாவட்ட மகளிர் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக சென்னை மாநகராட்சி ஆணையரை நியமித்து ஆணையிடுகிறது. மேலும், சென்னை மாநகராட்சி களப்பணியாளர்களை மகளிர் திட்ட பணிகளை கண்காணிக்க பயன்படுத்தலாம் எனவும், பயிற்சி மற்றும் தொண்டு நிறுவனங்களின் பட்டியல்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மகளிர் திட்ட அலுவலகத்திலேயே தொடரலாம் எனவும் இக்கருத்துருவை நடைமுறைப்படுத்தத் தேவையான செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரும், சென்னை மாநகராட்சி ஆணையரும் கலந்தாலோசித்து முடிவு எடுக்க அதிகாரம் வழங்கியும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்